# உன் திருயாழில்

உன் திருயாழில் என் இறைவா - பல
பண்தரும் நரம்புண்டு (2)
என்னையும் ஓர் சிறு நரம்பெனவே - அதில்
இணைத்திட வேண்டும் இசையரசே

உன் திருயாழில் என் இறைவா - பல
பண்தரும் நரம்புண்டு

யாழினை நீயும் மீட்டுகையில் - இந்த
ஏழையின் இதயம் துயில் கலையும் (2)
யாழிசைக் கேட்டுத் தனை மறந்து (2)
உந்தன் ஏழிசையோடு
இணைந்திடுமே.. இணைந்திடுமே

உன் திருயாழில் என் இறைவா - பல
பண்தரும் நரம்புண்டு

விண்ணகச் சோலையில் மலரெனவே - திகழ்
எண்ணிலாத் தாரகை உனக்குண்டு (2)
உன் அருள் பேரொளி நடுவினிலே (2)
நான் என் சிறு விளக்கையும்
ஏற்றிடுவேன்.. ஏற்றிடுவேன்

உன் திருயாழில் என் இறைவா - பல
பண்தரும் நரம்புண்டு
என்னையும் ஓர் சிறு நரம்பெனவே - அதில்
இணைத்திட வேண்டும் இசையரசே

உன் திருயாழில் என் இறைவா - பல
பண்தரும் நரம்புண்டு